**சினோலங்கா ஹோட்டல் அன்ட் ஸ்பா பிறைவேட் லிமிட்டட் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சினோலங்கா ஹோட்டல் அன்ட் ஸ்பா பிறைவேட் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு என்பன உள்ளடங்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயத்தை வலியுறுத்துதல்**

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படை தொடர்பாக நிதிக்கூற்றுக்களிலுள்ள 2.7 ஆம் குறிப்பின் மீது எனது கவனத்தை செலுத்துகின்றேன். மேற்படி குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பான மதிப்பீடு ஒன்றைை கம்பனியின் முகாமைத்துவம் மேற்கொண்டு எதிர்காலத்தில் வணிகத்தை தொடர்வதற்கு வளங்களை கொண்டிருக்கின்றதென திருப்தியடைகின்றது. மேலும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் மீது குறிப்பிடத்தக்களவு ஐயப்பாட்டினை ஏற்படுத்துகின்ற ஏதாவது பொருண்மையான நிச்சயமற்ற நிலைமைகள் தொடர்பாக முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. அமைச்சரவையானது நிர்மாணப் பணிகளை மீண்டும் தொடங்குவதற்கு 2020 யூலை 10 ஆம் திகதிய 20/1042/204/050 - I அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தனது அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. எனினும், 2022 மே 30 முதல் 09 மாதங்களுக்கு கிராண்ட் ஹயாட் கொழும்பு செயற்திட்டத்தை குறைப்பதற்கு கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானித்ததுடன் நிர்மாண நடவடிக்கைகள் அறிக்கையிடும் திகதி வரையிலும் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 மார்ச் 14 ஆம் திகதிய 23/0431/604/046 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லிமிட்டட் வசமுள்ள பங்குகள் மற்றும் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) (தாய்க் கம்பனி) லிமிட்டட்டில் லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டட் வைத்திருந்த பங்குகளை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் பொது திறைசேரிக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,446,366,057 நட்டமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 760,645,501 ஆனதால் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,207,011,558 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் இவ் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| ஆண்டு | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| நிதி வருமானம் | 11,221,595 | 28,749,233 | 10,464,970 | 11,041,814 | 10,339,498 |
| நிதி வருமானத்தில் அதிகரிப்பு/(குறைவு) சதவீதம் | (61)% | 175% | (5)% | 7% | (87)% |
| நிர்வாக செலவினங்கள் | 166,923,295 | 81,210,002 | 131,209,337 | 178,337,425 | 81,228,313 |
| நிர்வாக செலவினத்தில் அதிகரிப்பு/(குறைவு) சதவீதம் | 106% | (38)% | (26)% | 120% | (18)% |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | (2,446,366,057) | 760,645,501 | (193,289,884) | (5,133,182,782) | (202,725,525) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) இல் அதிகரிப்பு/(குறைவு) சதவீதம் | (422)% | 494% | (96)% | 2,432% | 581% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து பெறப்பட்ட குறுகிய காலக் கடன் ரூபா 400 மில்லியன் மற்றும் கடன் மீதான செலுத்த வேண்டிய ரூபா 126.07 மில்லியன் வட்டி என்பன 2018 சனவரி முதல் தீரப்பனவு செய்யப்படாமல் இருந்தன. | பிந்தைய முதலீடு திரும்பபெறுதல் பெறுகைகளை (post divestment proceeds) பயன்படுத்தி அனைத்து பொறுப்புக்களும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | கம்பனிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களுக்கு கம்பனியின் முகாமைத்துவம் முறையான கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2012 ஆகஸ்ட் 15 இன் 1771/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் கீழ், கம்பனி ஐ.அ.டொலர் 158,890,000 (ரூபா 18.5 பில்லியன்) மொத்த முதலீட்டில் இலக்கம் 116, காலி வீதி, கொழும்பு 03 இல் 90 சேவை அடுக்குமாடி குடியிருப்புக்களுடன் 475 அறைகள் கொண்ட நகர ஹோட்டலை நிர்மாணித்து செயற்படுத்துவதற்கு செயற்திட்டமொன்றை கம்பனி தொடங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட வர்த்தமானியின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப திகதி 2012 யூலை 19 ஆக இருந்ததுடன் செயற்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 24 மாதங்களுக்குள் வணிகச் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துதலும் தொடங்குதலும் திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>எனினும், இச் செயற்திட்டம் இன்னும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. 2020 யூலை 10 ஆம் திகதிய 20/1042/204/050-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஏறத்தாழ ரூபா 60 பில்லியன் ஆகும். 458 அறைகளில் 236 அறைகள் கொண்ட ஒரு முழுமையான ஹோட்டலாக செயற்படுவதற்கு, நிலை 31 உடன் சேர்த்து 16 நிலைகளை பகுதியளவு பூர்த்தி செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. கட்டம் 2, மீதமுள்ள 222 அறைகள் மற்றும் 100 சேவை அடுக்குமாடி குடியிருப்புக்களை பூர்த்தி செய்தலை உள்ளடக்கும். முதல் கட்டத்தின் இலக்கு பூர்த்தி செய்தல் திகதி 2021 ஆகஸ்ட் ஆகும். எனினும், ஆரம்ப செயற்திட்ட பூர்த்தி செய்தல் திகதியான 2014 யூலை 19 முதல் மீளாய்வாண்டு வரை ஏறத்தாழ 09 ஆண்டுகள் தாமதம் அவதானிக்கப்பட்டிருந்தது. | 2012 செப்தெம்பரில் தொடங்கப்பட்ட செயற்திட்டம் 2014 யூலையில் ஆரம்ப பூர்த்தி செய்தலுடன் இருக்க வேண்டிய போதிலும் அரசாங்க கொள்கை மாற்றங்கள் உட்பட பல காரணங்களால் இந்த கால எல்லை அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஹோட்டல் மனேஜ்மென்ட் கம்பனி வியாபாரக் குறி நிலையை ஹையாட் றீஜென்சியில் இருந்து கிராண்ட் ஹையாட்டிற்கு தரமுயர்த்துவதற்கு விரும்பியதால், ஒட்டுமொத்த கட்டமைப்பு மற்றும் மாடிகளின் எண்ணிக்கை போன்றவற்றில் பல மாற்றங்களைக் கொண்டிருந்தது.<br><br>2015 ஆம் ஆண்டில் மீண்டும் நிர்மாணப் பணிகள் மீள தொடங்கப்பட்டன, மேலும் 2017 ஆம் ஆண்டிலும் அதைச் சுற்றிலும் அரசாங்கக் கொள்கையின் பிரகாரம் பங்கு விலக்கலுக்குச் செல்ல அரசாங்கம் முடிவுசெய்து, பங்கு விலக்கல் செயல்முறை தொடர்ந்தது.இந்தக் காலப்பகுதியில் பங்கு விலக்கல் நிகழ்ச்சித்திட்டம் வெற்றியடையாததால் மீண்டும் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டது.<br><br>2023 மார்ச் 14 இல் 2023 மார்ச் 14 ஆம் திகதிய 23/0431/604/046 அமைச்சரவை தீர்மானத்தின் மூலம், கன்வில் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அதன் இரண்டு துணைக் கம்பனிகளை விலக்கிக் கொள்வதற்கு கொள்கையளவில் அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை அளித்துள்ளது. மேற்படி சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, கிராண்ட் ஹையாட் செயற்திட்டத்தின் தற்போதைய நிலைமை எஸ்ஓஈ மறுசீரமைப்பு அலகின் (எஸ்ஓஈஆர்யூ) அதிகார எல்லையின் கீழ் உள்ளது, கிராண்ட் ஹையாட் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட விலக்கலை முறைப்படுத்தி மற்றும் தொடர்வது தொடர்பாக எஸ்ஓஈஆர்யூ ஆல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டில் இருந்து எதிர்பார்த்த வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும் செயற்திட்ட கிரயம் அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்கும் கொடுக்கப்பட்ட கால எல்லையினுள் முகாமைத்துவம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் இன்னும் நிர்மாண கட்டத்தில் உள்ளதுடன் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. | கூட்டிணைந்த திட்டம் அதன் மூலோபாய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் இன்னும் நிர்மாண கட்டத்தில் உள்ளதுடன் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. | கம்பனி அதனது வருடாந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தை ஆண்டின் தொடக்கத்தில் தயாரித்து, அதற்கான அங்கீகாரத்தைப் பெற்று அமுல்ப்படுத்த வேண்டும். |